**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு – 2015**

---

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (எஸ்ஈசீ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, ஒதுக்கங்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 37(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள். பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2015 திசெம்பர் 08 இன் 364/26 ஆம் இலக்க ஆணைக்குழுப் பத்திரம் | மூன்று வாகனங்கள் ஏலத்திற்கு விடப்படாமல் 10 வருடங்களிற்கு மேலாக பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தன. அதேநேரம் ரூபா 7,990,000 தொகைக்கான புதிய வாகனமொன்று வரிசை அமைச்சிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2009 ஆகஸ்ட் 27 இன் 249 ஆம் இலக்க ஆணைக்குழுத் தீர்மானம் | ஆணைக்குழு மோட்டார் வாகனங்களின் கொள்வனவிற்கு பகுதியளவில் நிதியளிப்பதற்காக விசேட சூழ்நிலைகளின் கீழ் நிறைவேற்றுத்தரம் அற்ற பதவியணியினருக்கு மாத்திரம் இடர் கடன்களை வழங்குவதற்குத் தீர்மானித்திருந்த போதிலும் ரூபா 1,500,000 கூட்டுத்தொகையான இடர் கடன்கள் ஆணைக்குழுத் தீர்மானத்திற்கு முரணாக இந்த நோக்கத்திற்காக நிறைவேற்றுத்தர பதவியணி உறுப்பினரிற்கு வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

-

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 13,190,265 ஆன பற்றாக்குறைக்கெதிராக ரூபா 31,936,710 ஆன மிகையொன்றை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 45,126,975 ஆன முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. மூலதனச் சந்தை அபிவிருத்திச் செலவினங்கள் ரூபா 47,455,621 ஆல் குறைவடைந்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் வருமானமானது மொத்த வருமானத்தில் 4.9 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முன்னைய ஆண்டின் ரூபா 364 மில்லியனுடன் (ரூபா 334 மில்லியன் தொகையான செஸ் நிதியத்திலிருந்தான பரிமாற்றங்கள் உள்ளடங்கலாக) ஒப்பிடுகையில் ரூபா 353 மில்லியன் தொகையான தொழிற்பாட்டு செலவுகளை ஈடுசெய்வதற்கான செஸ் நிதியத்திலிருந்தான பரிமாற்றங்கள் உள்ளடங்கலாக ரூபா 382 மில்லியன் ஆக இருந்தது. அதேநேரம் மீளாய்வாண்டின் போது மூலதனச் சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 55 மில்லியன் ஆக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டில் ரூபா 103 மில்லியனாக இருந்தமையால் இந்த செலவினத்தில் 47 சதவீதமான குறைவினை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவினத்திலுள்ள குறிப்பிடத்தக்களவு முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2015 | 2014 | முரண் {சாதகமானது/(பாதகமானது)} | |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| செஸ் நிதியத்திலிருந்தான மாற்றம் | 353 | 334 | 19 | 5.7 |
| நானாவித வருமானம் மற்றும் மானியத்தின் அங்கீகாரம் | 16 | 18 | (2) | (11.1) |
| ஆளுக்குரிய மற்றும் நிர்வாகக் கிரயம் | (294) | (274) | (20) | (7.3) |
| மூலதன சந்தை அபிவிருத்திச் செலவினங்கள் | (55) | (103) | 48 | 46.6 |
| ஆண்டிற்கான மிகை/ (பற்றாக்குறை) | 32 | (13) | 45 | 346.1 |

மொத்தச் செலவினத்தில் 16 சதவீதம் மாத்திரம் மூலதனச் சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டில் 27 சதவீதமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், மொத்தச் செலவினத்தில் 51 சதவீதம் மீளாய்வாண்டில் ஆளுக்குரிய வேதனங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 ஆணைக்குழுப் பிரிவுகளின் செயலாற்றல்

-

**(அ) மேற்பார்வைப் பிரிவு**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்தப் பிரிவின் ஆதிக்க எல்லையின் கீழ் 128 நிறுவனங்கள் இருந்தன. மீளாய்வாண்டில் 102 நிறுவனங்களிற்கு விஜயம் செய்வதற்கு பிரிவானது பட்டியலிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் 4 விசேட விஜயங்களைத் தவிர்த்து 72 நிறுவனங்களிற்கு மாத்திரம் அல்லது முன்னைய ஆண்டின் இந்த 92 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 70 சதவீதம் விஜயம் செய்திருந்தனர்.

**(ஆ) கூட்டிணைப்பு அலுவல்கள் பிரிவு**

(i) சந்தை இடைத்தரகர்கள் மற்றும் முதலீட்டாளர்களிலிருந்து மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட 85 முறைப்பாடுகளில் 82 முறைப்பாடுகள் அல்லது 96 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதி வரை பிரிவினால் தீர்க்கப்பட்டிருந்தது.

(ii) ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் மீளாய்வாண்டின் போது ''குறித்த பிரதேசத்திற்கு புறம்பான மாற்றல்கள்'' இன் எண்ணிக்கை 108 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் இது 162 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 33 சதவீத குறைவினைக் காட்டுகின்றது.

(iii) முழுமையான மீளாய்விற்காக பெறப்பட்ட ஆண்டறிக்கைகளின் மொத்த எண்ணிக்கை 124 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 108 அறிக்கைகள் அல்லது 87 சதவீதம் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

**(இ) புலனாய்வுப் பிரிவு**

மீளாய்வாண்டின் இறுதிவரை புலனாய்வுப் பிரிவினால் கையாளப்பட்ட 19 வழக்குகளில் 5 வழக்குகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் 4 வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டிருந்த அதேநேரம் ஒரு வழக்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையை (சீஎஸ்ஈ) குறிப்பிட்டிருந்தது. அதே நேரம் ஏனைய வழக்கு மேலதிக விசாரணைக்காக கண்காணிப்பு மற்றும் புலனாய்வுக் குழுவினால் வழிநடாத்தப்பட்டிருந்ததுடன் புலனாய்வுச் செய்முறையில் 8 வழக்குகள் இருந்தன.

## 4.2 மனித வளங்கள் (எச்ஆர்) முகாமைத்துவம்

**ஆளணிக் கிரயம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டு காலப்பகுதிக்கான ஊழியரொருவருக்கான கிரயம் கீழே தரப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **2015** | **2014** | **2013** | **2012** |
|---|---|---|---|---|
| ஆளணிக் கிரயம் (ரூபா) | 178,614,001 | 166,060,617 | 159,203,688 | 140,311,036 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 75 | 80 | 83 | 82 |
| ஊழியரொருவருக்கான கிரயம் (ரூபா) | 2,381,520 | 2,075,757 | 1,918,116 | 1,711,110 |
| முரண் (சதவீதம்) | 14.7 | 8.2 | 12 | 8 |

மீளாய்வாண்டிற்கான ஊழியரொருவருக்கான கிரயம் முன்னைய அண்டுடன் ஒப்பிடுகையில் 14.7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. ''வாழ்க்கைச் செலவுப் படிகள், விசேட படிகள் மற்றும் புதிதாக அறிமுகப்படுத்திய மாதாந்தப் படிகள் தொடர்பான அரசாங்க அதிகரிப்புக்களை வழங்கியமை காரணமாக பதவியணியினர் கிரயம் அதிகரித்தமை பிரதானமாகவுள்ளது. மேலும் வருடாந்த சம்பள ஏற்றமும் ஆளணிக்குரிய கிரயம் அதிகரித்தமையை பிரதிபலிக்கின்றது'' என தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

## 5. பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினத்திற்கிடையில் 35 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

பாதீடு செய்தல் - சில சந்தர்ப்பங்களில் பாதிடப்பட்ட செலவினங்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.